இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

வானதூதர் அவரைப் பார்த்து, “மரியா, அஞ்சவேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார்; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார். (லூக்கா 1:30-33)

# இம்மானுவேல் - கடவுள் நம்மோடு



கிறிஸ்துப் பிறப்பு நம் அனைவருக்கும் சொல்லக்கூடிய முதன்மையான செய்தி, கடவுள் வரலாற்றில் செயல்பட்டார் என்பதாகும். இதையே வேறு விதமாகச் சொல்லவேண்டும் என்றால், கிறிஸ்து பிறப்பு என்பது கட்டுக்கதையோ, புராணமோ அல்ல, அது வராலாற்றில் நடந்த சிறப்பான, தரமான, முக்கியமான ஒரு நிகழ்வு.

லூக்கா நற்செய்தியாளர் இயேசுவின் பிறப்பைக் குறித்துப் பதிவு செய்யும் பொழுது, அகுஸ்து சீசர் உரோமைப் பேரரசராக இருந்த பொழுது, சிரிய நாட்டில் குரோனியு ஆளுநராக இருந்தபோது, தாவீதின் ஊராகிய பெத்லகேமில் இயேசு பிறந்தார் என்று பதிவுசெய்கின்றார். அப்படியானால், இயேசு வின் பிறப்பு வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு, அதுவும் சாதாரண நிகழ்வு அல்ல, முக்கியமான நிகழ்வு என்பது உண்மையாகின்றது. இயேசு வரலாற்றில் தோன்றினார் என்றால், அவர் மக்களுடைய துன்ப துயரங்களில் பங்கு கொண்டார்; அவற்றைப் போக்கத் தன் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்தார் என்பது நிரூபணமாகின்றது.

## மகிழ்ச்சியைக் கொண்டுவந்த இயேசு

வரலாற்றில் தோன்றிய இயேசு, மக்களுக்கு எதைக் கொண்டுவந்தார் என்று சிந்தித்துப் பார்ப்பது நல்லது. ஒவ்வொரு குழந்தையும் இப்பூவுலகில் பிறக்கின்ற போது, அது தன்னுடைய பெற்றோருக்கும் தன்னுடைய உற்றார் உறவினருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. ஆனால், இயேசுவின் பிறப்போ ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கின்றது. வயல்வெளியில் இருந்த கிடையைக் காவல் காத்துக்கொண்டிருந்த இடையர்களுக்குத் தோன்றுகின்ற வான தூதர்கள் சொல்லக்கூடிய, “எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கின்றேன்....” என்ற வார்த்தைகள் (லூக் 2: 10) இந்த உண்மையை நமக்கு உணர்த்துகின்றன.

இயேசுவின் பிறப்பு எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாய் இருக்கின் றது என்கின்றபோது, அதுவே உன்ன தத்தில் கடவுளுக்குக் மாட்சியும் உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதியும் உண்டாகக் காரணமாக இருக்கின்றது. எவ்வாறெனில் இயேசு, தந்தைக் கடவுள் தன்னிடம் கொடுத்த பணியினைச் செய்ததன் மூலம் அவரை மாட்சிப்படுத் தினார் (யோவா 17:4). அதே நேரத்தில் அவருடைய அமைதியை அதை ஏற்றுக்கொள்ளும் (லூக் 10:6) அவருக்கு உகந்தோருக்குக் கிடைக்கச் செய்தார். இவ்வாறு கிறிஸ்துவின் பிறப்பு எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் செய்தியாக வும் அவருக்கு உகந்தோருக்கு அமை தியைத் தருவதாக இருக்கின்றது.

## மீட்பராய் வந்த இயேசு

வரலாற்றில் தோன்றி, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி தந்த இயேசு, எப்படிப்பட்டவராய் இப்பூமிக்கு வந்தார் என்பதைத் தெரிந்து கொள்வோம். வானதூதர்கள் இடையர்களுக்குத் தோன்று கின்றபோது, தொடர்ந்து சொல்லக்கூடிய வார்த்தைகள் தான், “ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார்” என்பதாகும். ஆம், இயேசு இந்த உலகிற்கு மீட்பராக, அதுவும் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பவராகப் பிறந்தார் (மத் 1:21).

முதல் பெற்றோரான ஆதாமும் ஏவாளும் செய்த பாவத்தினால் கடவுளோடு இருந்த உறவினை முறித்துகொண்ட மனித இனத்தை, உலகின் பாவங்களைப் போக்க (யோவா 1:29) மீட்பராக வந்த உலக இயேசு மீண்டும் ஒப்புரவாக்கினார். இதனால் மனித இனம் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, கடவுளோடு ஒப்புரவாக்கப் பட்டது.

அடுத்ததாக, ஆண்டவர் இயேசு இவ்வுல கிற்கு ஏன் மீட்பராக வரவேண்டாம் என்ற கேள்வி எழலாம். அதற்குப் பதில் தருவதாக இருக்கின்றது கீழே உள்ள ஒரு கவிஞரின் வார்த்தைகள்: “மனிதர்களுக்குத் தகவல் கள்தான் அதிகம் தேவை என்றால், அவர் ஒரு கல்வியாளராகப் பிறந்திருப்பார்; மனிதர்களுக்குத் தொழில் நுட்பம்தான் அதிகம் தேவை என்றால், அவர் ஒரு விஞ்ஞானியாகப் பிறந்திருப்பார்; மனிதர் களுக்கு பணம்தான் அதிகம் தேவை என்றால், அவர் ஒரு பொருளாதார நிபுணராகப் பிறந்திருப்பார்; மனிதர்களுக்கு மகிழ்ச்சிதான் அதிகம் தேவை என்றால், அவர் ஒரு நகைச்சுவையாளராகப் பிறந்திருப்பார்; ஆனால், மனிதர்களுக்கு அதிகம் தேவைப்பட்டது பாவத்திலிருந்து விடுதலை. அதனால்தான் அவர் மீட்பராகப் பிறந்தார்.”

ஆம், இவ்வுலகிற்குப் பாவத்திலிருந்து விடுதலை தேவைப்பட்டது. அதனாலேயே அவர் மீட்பராகப் பிறந்தார். ஆகையால், மீட்பராகப் பிறந்திருக்கும் இயேசுவை அன்று ‘விடுதியில் இடமில்லை’ என்று சொல்லி விரட்டிவிட்டவர்கள் போன்று, நாமும் நம்முடைய உள்ளத்திலும் இல்லத்திலும் இடமில்லை என்று சொல்லி விரட்டியடிக்காமல், அவர் நம்முடைய உள்ளத்தில் தங்குவதற்கு இடம் கொடுப் போம். அதன்மூலம் அவர் தருகின்ற பெரும் மகிழ்ச்சியைப் பெறுவோம்.

இறைத்தூதன்
வாசகர்கள்
அனைவருக்தும்
இதயங்கனிந்த கிறிஸ்து
பிறப்பு பெருவிழா
நல்வாழ்த்துக்கள்.



## "ஒன்று சேர்ந்து வழி நடத்தல்" 300 பேர் கூடிய பினாங்கு மறைமாவட்டத்தின் மாபெரும் ஒன்று கூடல்

பினாங்கு: 'ஒன்று சேர்ந்து வழிநடத்தல்' என்ற கருப்பொருளின் அடிப்படையில் பினாங்கு மறைமாவட்டத்திலிருந்து 300 சமூகத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், கன்னியர்கள் குருக்கள் கலந்து கொண்ட ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் பினாங்கு புலாவ் திக்குஸ் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

ஒன்று சேர்ந்து வழி நடத்தல் என்றால் என்ன? எப்படி ஒன்று சேர்ந்து வழி நடப்பது? என்பதின் விளக்கம் தரப்பட்டது. ஒன்று சேர்ந்து வழி நடக்கையில் எப்படி ஒருவர்



ஒருவருக்கு உதவுவது, ஒருவர் ஒருவரை அறிந்து கொள்வது, ஒருவர் மற்றவரோடு பேசுவது ஆகிய பண்புகளுக்கு விவிலிய அடிப்படையில் விளக்கம் அளித்தார் இயேசு சபை குரு பவுல் தாஸ்.

ஒன்று சேர்ந்து வழி நடக்கையில் மன மாற்றம், ஏற்றுக் கொள்ளுதல் முக்கிய பண்புகள். சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர் களை, ஒடுக்கப்பட்டவர்களை, தனிமைப் படுத்தப்பட்டவர்களை ஒன்றாக அணைத்து செல்வது கிறிஸ்தவர்களின் கடமை. ஒன்று சேர்ந்து வழி நடக்கும் பயணத்தில் யாரையும், எந்தக் குழுவையும் கைவிட்டு விடக்கூடாது.

கூடாரத்தை விரிவுபடுத்துங்கள் அதில் எல்லாரும் நுழைந்திருக்க வேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (எசா. 54:2).

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்களின் பாலைநில பயணம் உருவகமாக காட்டி விளக்கம் அளிக்கப்பட்டது. பங்கெடுப் பாளர்கள் குழுக்களாகவும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

காலை முதல் மாலை வரை நடைபெற்ற ஒன்று கூடுதல் கருத்தரங்கம் அருள்பணி ஜூட் மிரண்டா தலைமையில் நடைபெற்றது. பினாங்கு மறைமாவட்ட கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் கோலாலம்பூர் மறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களும் கலந்து சிறப்பு சேர்த்தனர்.

பினாங்கு மறைமாவட்டத்தின் 30 பங்குகளில் இருந்து 25 அருள்பணியாளர்கள் பங்கு கொண்டனர்.

அடுத்தாண்டு எல்லா மறைமாவட்டங் களையும் உள்ளடக்கிய மலேசிய மேய்ப்புப் பணி மாநாடு ஆகஸ்ட் மாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

## தீபகற்ப மலேசிய அருங்கொடை பணிக்குழுவின் கூட்டு கருத்தரங்கு நடைபெற்றது

**கோலாலம்பூர்:** 32 பங்கேற்பாளர்கள், ஒவ்வொருவரும் கத்தோலிக்க நம்பிக் கையைப் பற்றிய தங்கள் புரிதலை ஆழப்படுத்தும் மற்றும் கிறிஸ்தவ சமூகத்தில் தங்கள் ஈடுபாட்டை அதிகரிக் கும் நோக்கத்தில் 'தூய ஆவியாரில் வளர்ச்சியடைதல்' கருத்தரங்கில் ஆழ்ந்த ஆன்மீக பயணத்தை மேற்கொண்டனர்.

தமிழில் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கு தீபகற்ப மலேசிய அருங்கொடை ஒன்றிப்புப் பணிக்குழுவினர் ஏற்பாட்டில் கடந்த டிசம்பர் முதலாம் திகதி முதல் மூன்றாம் திகதி வரை கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி கழகத்தில் (API) நடைபெற்றது.

இக்கருத்தரங்கானது தூய ஆவியில் வாழ்வு கருத்தரங்கு வழி இதற்கு முன்பாக அமைக்கப்பட்ட அடித்தளத்தில் பங்கேற்பாளர்களுக்கு ஆன்மீக வளர்ச் சியின் தொடர்ச்சியை வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டிருந்தது.

கத்தோலிக்க நம்பிக்கையின் வளத்தை மேலும் ஆராய்ந்து, தலத்திருஅவை சமூகங்கள் மற்றும் திருஅவையின் பரந்த பணிகளில் அதிக சுறுசுறுப்பான ஈடுபாட்டை நோக்கி அவர்களின் புதிய புரிந்துணர்வைப் பதிய வைத்து முன்னேற்றத்திற்கு வழி வகுக்க பங்கேற் பாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

எனவே, இக்கருத்தரங்கில் கடவுளின் வெளிப்பாடு, புனித நூல்கள், அருள் மிகப்பெற்ற அன்னை மரியா, கிறிஸ்தவ இறைவேண்டல்கள், சடங்குகள், சமூகத் தில் வாழ்க்கைமுறை, நற்செய்தி மற்றும் பணிகளில் ஆர்வத்துடன் பங்கேற்க ஊக்குவிக்கப்பட்டனர்.

அருள்பணி ஜோன் ஆனந்தன், OFM, Cap, டாக்டர் ஸடீவன் செல்வராஜ், மற்றும் அருட்சகோதரி ரீட்டா சவரி யண்ணன் உட்பட சிறப்புமிகு சொற் பொழிவாளர்களால் நிபுணத்துவத்துடன் நடத்தப்பட்ட அமர்வுகள் ஒரு முழுமையான அனுபவத்தை அளித்தன.

அருங்கொடை இயக்கம் என்பது மறை மாவட்ட எல்லைகளைத் தாண்டியது. தீபகற்ப மலேசியாவின் மூன்று மறைமாவட்டங்களின் பிரதிநிதித்துவம் - கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர், பினாங்கு மறைமாவட்டம் மற்றும் மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம் ஆகிய மூன்று மறைமாவட்டங்களின் பங்கேற்பாளர்கள் இங்கே ஒன்றிகூடியது கத்தோலிக்க திருஅவை நம்பிக்கையில் உள்ள ஒன்றிப்பை வெளிப்படுத்தியது என்றால் மிகையா காது.

*— கே. ஜொஸ்லின் (பினாங்கு மறைமாவட்டம்)*

## ஜொகூரில் எஸ்.பி.எம் மாணவர்களுக்கு வழிகாட்டி கருத்தரங்கு நடத்தப்பட்டது

ஜொகூர் : கடந்த டிசம்பர் 2, 2023 அன்று, இங்குள்ள புனித அமல உற்பவி பங்கில், எஸ்.பி.எம் மாணவர்களுக்கென்று தன்முனைப்பு பயிலரங்கு ஒன்று நடத்தப் பட்டது. இப்பயிலரங்கில், படிவம் 4 மற்றும் படிவம் 5 மாணவர்கள் கலந்து பயன டைந்தனர்.

இப்பயிலரங்கை எஸ்.பி.எம். தேர்வில் 8ஏ + 1ஏ மதிப்பெண்கள் பெற்று, மெட்ரிகு லேஷனில் (matriculation) 4.00 மதிப் பெண்கள் பெற்று சாதனை படைத்த 19 வயதான மத்தேயுதாஸ் சந்தனதாஸ் அவர்கள் இந்த நிகழ்வை வழிநடத்தினார்.

மத்தேயுதாஸ் தனது சிறந்த வெற்றி வழிவகுத்த ஆய்வு நுட்பங்களையும் அன்றாட நடைமுறைகளையும், தன்னல மற்ற முறையில் எதையும் எதிர்பார்க்காமல் பயிலரங்கிற்கு வந்திருந்த 11 மாணவர் களுடன் அனுபவத்தை பகிர்ந்து கொண் டார்.

மத்தேயுதாஸ் தனது உரையில், சீரான முயற்சியின் முக்கியத்துவத்தையும், முறைமைப்படுத்தப்பட்ட கற்கும் முறை யையும் வலியுறுத்தினார். நிகழ்வின் முடிவில் "கடவுளின் கொடையைக் கடவுளின் குழந்தைகளுக்குத் திரும்ப பகிர வேண்டும்" எனும் கருத்தியலை வலியுறுத்தினார். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் கூற்றுக்கேற்ப சக மாணவர்களுக்கும் பயனுற நாம் திருப்பிக் கொடுக்கவும், அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் மனப்பான்மையைக் கொண்டிருக்கவும் முன்வர வேண்டும் என தம் உள்ளரார்ந்த எண்ணத்தைப் பகிரந்து கொண்டார். அந்த பயிலரங்கம் பல இளைஞர்கள் தேர்வில் சிறப்பு அடைவு நிலையைப் பெறவும், கல்வியல் முன்னோக்கிச் செல்லவும், ஊக்கமளிக்கும் அழைப்பாக அமைவதாக அவர் சுட்டி காட்டினார்.

மத்தேயுதாஸ் அவர்களைப் போல மேலும் பல இளைஞர்கள் கல்வியில் முன்னேறவும் தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளவும், கிறிஸ்துவின் திருவுடலில் கூட்டாக பணியாற்றவும், நமது இளையர்கள் சமூகங்களுக்குள் ஆதரவும் மற்றும் பகிரும் பண்பாட்டை வளர்க்கவும் இது ஒரு சிறந்த முயற்சியாக பங்கேற்றவர்கள் கருத்துரைத் தனர். நமது பங்கு குருவானவர் அருட்தந்தை எட்வர்ட் ராயப்பன் அவரின் வழிகாட்டுதலினாலும் மற்றும் ஆதரவி னாலும் இந்த பயன்னுள்ள தன்முனைப்பு பயிலரங்குக்கு ஏற்பாடுச் செய்யப்பட்டது.



## பெருமையில் அல்ல தாழ்ச்சியில் மீட்பரை ஏற்போம்

இன்று திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறு. இன்று மாலையில் இயேசு பிறப்பு பெருவிழாவின் திருவிழிப்பு திருப்பலியில் பங்கேற்க நாம் தயாராகி வருகிறோம். இன்று, இந்த கடைசி வாரமானது 'அன்பை' கருப்பொருளாகக் கொண்டு, கிறிஸ்துவின் அன்பை நாம் உணர அழைக்கின்றது.

முதல் வாசகத்தில், கடவுளுக்கு ஆலயம் கட்ட வேண்டும் என்ற தாவீது மன்னனின் எண்ணம் நிறைவேறவில்லை. அது அவருக்கு மிகுந்த மனவேதனையளிக்கிறது. அப்போது கடவுள் தமது ஊழியன் நாத்தன் வழியாகப் பேசுகிறார். "நானே உன் வீட்டை கட்டுவேன். உன் வழித் தோன்றலின் அரசை நான் நிலை நாட்டுவேன். உனது அரசு என்றென்றும் நிலைத்திருக்கும்" என்ற கூறுவதை முதல் வாசகம் காட்டுகிறது. மன்னர் தாவீதின் வீட்டைத் தானே கட்டியெழுபப் போவதாக இறைவனே வாக்களிக்கிறார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல் தொன்று தொட்டு மறைந்திருந்த உண்மைகள் இறைவாக் கினர் வழியாக இப்பொழுது புறவினத் தாருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வாழும் கடவுளின் கட்டளைப்படி எல்லா மக்களினங்களுக்கும் அது தெரிய வந்துள்ளது என்றும் கூறுகிறார்.

நற்செய்தியில் முதன்மை வானதூதர் மரியாவிற்குத் தோன்றி, இறைவனின் மீட்புத் திட்டத்தைச் சொல்லி முடிந்ததும் அவர், "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்கின்றார். மரியா முதன்மை வானதூதர் கபிரியேலிடம் சொல்லும் இச்சொற்களில் இரண்டு உண்மைகள் அடங்கியிருக் கின்றன.

முதலாவது, மரியா, இறைவனிடம் திரு வுளம் நிறைவேற 'அப்படியே ஆகட்டும்' என்று மறுமொழி தந்தது. அடுத்து, இறைவனின் மீட்புத் திட்டம் மண்ணகத்தில் நிறைவேற தாழ்ச்சியோடு ஒத்துழைப்பு நல்கியது.

முதல் வாசகத்தில் தாவீது கோயில் கட்டும் தன்னுடைய விருப்பம் நிறைவேற வேண்டும் என்று செய்ல்பட்டான். நற்செய் தியிலோ, அன்னை மரியா இறைவனின் விருப்பம் தன்னில் நிறைவேற வேண்டும் என்று தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தார்.

எனவே, நம் கண்முன் தாவீது போன்று எண்ணம் கொண்டு வாழ்வதா அல்லது மரியாவைப்போல தாழ்ச்சியோடு, இறை வனின் விருப்பத்திற்கு ஏற்ப வாழ்ந்து, அவர் தருகின்ற ஆசியைப் பெற்று மகிழ்வதா ? என்று சிந்திக்க வேண்டும்.

இன்றைக்கு பிரிவினைச்சபைகள் கன்னி மரியாளுக்கு சிறப்பு வணக்கம் செலுத் துவதை குறைகூறிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இன்றைய நற்செய்திப்பகுதியில் தந்தையாகிய கடவுளே அன்னைக்கு புகழ்மாலை சாற்றுவதை நாம் அறிகிறோம். அன்னை மரியாவுக்கான வணக்கம் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் என்பதை மனதில் கொள்வோம்.

*-கிரேஸ் ஜோசப், பெஸ்தாரி ஜெயா*

**திருவருகைக் காலம் 4 ம்-ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | 2 சாமு. 7:1-5,8-12,14,16 |
| தி.பா | 89: 1-2. 3-4. 26,28 |
| 2-ம் வாசகம் | உரோ 16: 25-27 |
| நற்செய்தி | லூக்கா 1:26-38 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**